# தமிழ் வகுப்பு - 10
## இயல் - 1
## இலக்கணம், சொல், எழுத்து

**I. சான்று தருக:-**

1. செய்யுளிசை அளபெடை -

அ) ஓஒதல் ஆ) எடுப்பதூஉம் இ) உரனசைஇ ஈ) எஃஃகு

2. இசைநிறை அளபெடை ( மொழியிடை )

அ) ஓஒதல் ஆ) உறாஅர்க்கு இ) உரனசைஇ ஈ) எடுப்பதூஉம்

3. செய்யுளிசை அளபெடை ( மொழியிறுதி )

அ) ஓஒதல் ஆ) உறாஅர்க்கு இ) படாஅபறை ஈ) எடுப்பதூஉம்

4. இன்னிசை அளபெடை

அ) அம்மாஅ ஆ) கெடுப்பதூஉம் இ) உறாஅர்க்கு ஈ) எங்ங்கிறைவன்

5. சொல்லிசை அளபெடை

அ) தம்பீஇ ஆ) எடுப்பதூஉம் இ) வரனசைஇ ஈ) எஃஃகிலங்கிய

6. ஒற்றளபெடை

அ) பக்க்கம் ஆ) எங்ங்கிறைவன் இ) வாழ்ழ்க்கை ஈ) பட்ட்டம்

7. தனிமொழி

அ) கண்ணன் ஆ) கண்ணன் வந்தான்

இ) மலர் வீட்டுக்குச் சென்றாள் ஈ) நீ வா

8. தொடர்மொழி

அ) கண் ஆ) படி

இ) படித்தான் ஈ) கண்ணன் படித்தான்

9. பகுபதம்

அ) படி ஆ) படித்தான் இ) கண் ஈ) நட

10. பகாபதம்

அ) நடி ஆ) கண்ணன் இ) பார்த்து ஈ) சென்றான்

11. பொதுமொழி

அ) கண் ஆ) கண்ணன் இ) படித்தல் ஈ) வேங்கை

12. தொழிற்பெயர்

அ) படித்தல் ஆ) படித்தான் இ) கண்ணன் ஈ) வந்தவன்

13. விகுதி பெற்ற தொழிற்பெயர்

அ) வருதல் ஆ) தட்டு இ) அடி ஈ) சூடு

14. எதிர்மறைத் தொழிற்பெயர்

அ) நட ஆ) நடத்தல் இ) நடவாமை ஈ) கேடு

15. முதனிலைத் தொழிற்பெயர்

அ) தட்டு ஆ) தட்டுதல் இ) தட்டாமை ஈ) கேடு

16. முதனிலைதிரிந்த தொழிற்பெயர்

அ) கெடுதல் ஆ) கெடு இ) கேடு ஈ) கெட்டவன்

17. வினையாலணையும் பெயர்

அ) வந்தவர் அவர்தான் ஆ) வந்தான்

இ) வருதல் ஈ) கண்ணன்

18. உருபுபெற்ற வினையாலணையும் பெயர்

அ) வந்தவர் அவர்தான் ஆ) வந்தவரைப் பார்த்தான்

இ) வேங்கை ஈ) பொறுத்தார் பூமியாள்வார்

19. வினையாலணையும் பெயர் ( எதிர்காலம் )

அ) வந்தவர் அவர்தான் ஆ) உயர்க்காப்பான் தோழன்

இ) வந்தவரைக் கண்டான் ஈ) வருதல் வேண்டும்

**II. கூறியவாறு செய்க :-**

20. உறாஅர் ( அளபெடை வகையைக் கூறு )

அ) மொழிமுதல் செய்யுளிசை ஆ) மொழியிடை செய்யுளிசை

இ) மொழியிறுதி செய்யுளிசை ஈ) இன்னிசை

21. படாபறை ( அளபெடை ஆக்குக )

அ) படாஇபறை ஆ) படார்பறை இ) படாஅபறை ஈ) பட்பறை

22. ஓஒதல் ( அளபெடை நீக்குக )

அ) ஓஒதல் ஆ) ஓஅதல் இ) ஓதல் ஈ) ஓடுதல்

23. எடுப்பதும் ( அளபெடை ஆக்குக )

அ) எடுப்பதூம் ஆ) எடுப்பதூஉம் இ) எடுப்பதுஉம் ஈ) எடுப்பதுஊம்

24. உரனசை - ( அளபெடை ஆக்குக )

அ) உரனசைஅ ஆ) உரனசைஉ இ) உரனசைஇ ஈ) உரனசைஒ

25. கண் கருவிளை ( அளபெடை ஆக்குக )

அ) கண்ண்ன் கருவிளை ஆ) கண் கருஉவிளை

இ) கண்ணன் கருவிளை ஈ) கண் கருவிளைஇ

26. தனிமொழி எது?

அ) கண் ஆ) கண்ணன் வந்தான் இ) மலர் வீடு ஈ) பெற்றான்

வெற்றி

27. கண்ணன் - ( தொடர்மொழி ஆக்குக )

அ) கண் ஆ) கண்+ண்+அன் இ) கண்ணன் வந்தான் ஈ) கண்ணா

28. எட்டு ( பிரித்து எழுதுக )

அ) எட்+டு ஆ) எட்+ட்+உ இ) எள்+து ஈ) எட்+உ

29. வேம்+கை - ( சேர்த்து எழுதுக )

அ) வேக்கை ஆ) வேம்கை இ) வேகை ஈ) வேங்கை

30. தாமரை - ( தொடர் மொழியாக்குக )

அ) தா ஆ) மரை இ) தா மரை ஈ) மலர்

31. ஈதல் ( எவ்வகைப்பெயர் )

அ) பொருட்பெயர் ஆ) வினையாலணையும் பெயர்

இ) தொழிற்பெயர் ஈ) பண்புப்பெயர்

32. வாழ் - ( விகுதி சேர்க்க )

அ) வாழ்ந்தான் ஆ) வாழ்க்கை இ) வாழு ஈ) வாழ்ந்தவன்

33. ஆளல் - ( விகுதியை எடுத்து எழுதுக )

அ) ஆள் ஆ) ஆள இ) ல் ஈ) அல்

34. எதிர்மறைத் தொழிற்பெயரைக் கண்டுபிடி

அ) நடத்தல் ஆ) நடத்தை இ) நடவாமை ஈ) நடை

35. கொல்லாமை ( எதிர்மறை நீக்குக )

அ) கொல் ஆ) கொல்லுதல் இ) மை ஈ) கொல்லா

36. சுடுதல் ( முதனிலைத் தொழிற்பெயராக்குக )

அ) சுடு ஆ) சூடு இ) சுடாமை ஈ) சுட்டவர்

37. கெடு - ( முதனிலைத் திரிந்த தொழிற்பெயராக்குக )

அ) கெடுதல் ஆ) கெட்ட இ) கேடு ஈ) கெட்டவன்

38. பொறுத்தான் ( வினையாலணையும் பெயராக்குக )

அ) பொறு ஆ) பொறுத்தல் இ) பொறுத்தவன் ஈ) பொறாமை

39. பொறுத்தார் - ( உருபு சேர்த்து எழுதுக )

அ) பொறுத்தவர் ஆ) பொறுத்தார்க்கு பூமி சொந்தம்

இ) பொறுத்தல் ஈ) பொறு

**III. இலக்கணக் குறிப்பு எழுதுக :-**

40. தம்பீஇ

அ) செய்யுளிசை அளபெடை ஆ) இயற்கை அளபெடை

இ) இன்னிசை அளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

41. உறாஅர்க்கு உறுநோய்

அ) இசைநிறை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

42. படிப்பதூஉம்

அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) ஒற்றளபெடை ஈ) சொல்லிசை அளபெடை

43. குடிதழீஇ

அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

44. வெஃஃஃகுவார்க்கில்லை

அ) ஒற்றளபெடை ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்

இ) உயரளபெடை ஈ) தொழிற்பெயர்

45. படி

அ) பகுபதம் ஆ) பகாப்பதம் இ) தொடர்மொழி ஈ) பொதுமொழி

46. படித்தான்

அ) பகுபதம் ஈ) பகாப்பதம் இ) தொடர்மொழி ஈ) பொதுமொழி

47. கண்ணன்

அ) தனிமொழி ஆ) தொடர்மொழி இ) பொதுமொழி ஈ) சொற்றொடர்

48. கண்ணன் வந்தான்

அ) தனிமொழி ஆ) தொடர்மொழி இ) பொதுமொழி ஈ) தொழிற்பெயர்

49. பலகை, தாமரை, வேங்கை, எட்டு, அந்தமான்

அ) தனிமொழிகள் ஆ) தொடர்மொழி இ) பொதுமொழிகள் ஈ) சொற்றொடர்கள்

50. ஈதல், நடத்தல், வாழ்க்கை, ஆட்டம்.

அ) விகுதிபெற்ற தொழிற்பெயர்கள் ஆ) எதிர்மறைத்தொழிற்பெயர்கள்

இ) முதனிலைத் தொழிற்பெயர்கள் ஈ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்கள்

51. நடவாமை

அ) தொழிற்பெயர் ஆ) விகுதிபெற்ற தொழிற்பெயர்

இ) எதிர்மறைத் தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

52. அடி

அ) முதனிலைத் தொழிற்பெயர் ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

இ) வினையாலணையும் பெயர் ஈ) எதிர்மறைத் தொழிற்பெயர்

53. சூடு

அ) முதனிலைத் தொழிற்பெயர் ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

இ) வினையாலணையும் பெயர் ஈ) எதிர்மறைத் தொழிற்பெயர்

54. வந்தவன் அவன்தான்

அ) தொழிற்பெயர் ஆ) வினையாலணையும் பெயர்

இ) உருபெற்ற வினையாலணையும் பெயர் ஈ) விகுதிபெற்ற தொழிற்பெயர்

55. துப்பார்க்கு

அ) வினையாலணையும் பெயர்

ஆ) உருபு பெற்ற வினையாலணையும் பெயர்

இ) தொழிற்பெயர்

ஈ) அளபெடை

56. பொறுத்தார்

அ) இறந்தகாலம் ஆ) நிகழ்காலம் இ) எதிர்காலம் ஈ) எதிர்மறை

**IV. நிரப்புக :-**

57. எழுத்து __________ வகைப்படும்.

அ) 2 ஆ) 10 இ) 30 ஈ) 247

58. சார்பெழுத்து ___________ வகைப்படும்.

அ) 2 ஆ) 10 இ) 7 ஈ) 5

59. அளபெடுத்தல் என்பதன் பொருள் ____________.

அ) அளவு குறைதல் ஆ) நீண்டு ஒலித்தல்

இ) அளவு குறுகி ஒலித்தல் ஈ) சரியாக ஒலித்தல்

60. அளபெடை ____________ வகைப்படும்.

அ) 2 ஆ) 3 இ) 4 ஈ) 6

61. செய்யுளில் ஓசை குறையும் போது அதனை நிறைவு செய்ய நெட்டெழுத்துகள் அளபெடுத்தலைச் ____________ என்போம்.

அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

62. செய்யுளிசை அளபெடையை ____________ என்றும் கூறுவர்.

அ) இசைநிறை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

63. செய்யுளில் ஓசை குறையாத இடத்திலும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது ____________ ஆகும்.

அ) இசைநிறை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

64. செய்யுளில் ஒரு பெயர்ச் சொல் எச்சச் சொல்லாகத் திரிந்து அளபெடுப்பது ____________ ஆகும்.

அ) செய்யுளிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) சொல்லிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

65. 'நசை' என்பதன் பொருள் __________.

அ) அசை ஆ) விருப்பம் இ) விரும்பு ஈ) நசுக்கி

66. 'நசைஇ' என்தன் பொருள் __________.

அ) அசை ஆ)விருப்பம் இ) விரும்பி ஈ) நசுக்கி

67. செய்யுளில் ஓசை குறையும்போது அதனை நிறைவு செய்ய ங், ஞ், ண், ந், ம், ன், வ், ய், ல், ள், ஃ ஆகிய 11 எழுத்துகள் அளபெடுப்பது __________ ஆகும்.

அ) உயிரளபெடை ஆ) ஒற்றளபெடை

இ) இயற்கை அளபெடை ஈ) மெய்யளபெடை

68. ஓர் எழுத்து தனித்தோ, பல எழுத்துகள் சேர்ந்தோ பொருள் தரும் வகையில் அமைவது __________ ஆகும்.

அ) மொழி ஆ) சொல் இ) இலக்கணம் ஈ) இலக்கியம்

69. ஒருமொழி __________.

அ) ஒருபொருளன ஆ) பலபொருளன இ) இருமையும் ஈ) பொதுமொழி

70. ஒரு சொல் தனித்து நின்று பொருள் தருமாயின் அது __________ எனப்படும்.

அ) தனிமொழி ஆ) பொதுமொழி இ) தொடர்மொழி ஈ) தொழிற்பெயர்

71. 'கண்ணன்' என்பது __________.

அ) பகுபதம் ஆ) பாகப்பதம்

இ) தொழிற்பெயர் ஈ) வினையாலணையும் பெயர்

72. 'கண்' என்பது __________.

அ) பகுபதம் ஆ) பகாப்பதம் இ) தொழிற்பெயர் ஈ) தொடர்மொழி

73. இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தனிமொழிகள் தொடர்ந்து வந்து பொருள் தருவது ______.

அ) தனிமொழிகள் ஆ) தொடர்மொழி இ) பொதுமொழி ஈ) தமிழ்மொழி

74. ஒரு சொல் தனித்து நின்று ஒரு பொருளையும் அச்சொல்லே பிரிந்து நின்று வேறு பொருளையும் தந்து தனிமொழிக்கும் தொடர்மொழிக்கும் பொதுவாய் அமைவது __________. எனப்படும்.

அ) தனிமொழி ஆ) தொடர்மொழி இ) பொதுமொழி ஈ) செம்மொழி

75. 'எட்டு' என்பது __________.

அ) தனிமொழி ஆ) தொடர்மொழி இ) பொதுமொழி ஈ) எண்மொழி

76. ஒரு வினை (அ) செயலைக் குறிக்கும் பெயரானது எண், இடம், காலம், பால் ஆகியவற்றைக் குறிப்பாகவோ வெளிப்படையாகவோ உணர்த்தாமல் வருவது __________ எனப்படும்.

அ) தனிமொழி ஆ) தொழிற்பெயர்

இ) வினையாலணையும் பெயர் ஈ) பண்புப்பெயர்

77. வினையுடன் விகுதி சேர்ந்து உருவாகும் தொழிற்பெயர் __________. ஆகும்.

அ) விகுதிபெற்ற தொழிற்பெயர் ஆ) வினையாலணையும் பெயர்

இ) தொடர்மொழி ஈ) பண்புப்பெயர்

78. ஒரே வினையடி பல __________ ஏற்கும்.

அ) விகுதிகளை ஆ) பெயர்களை இ) உருபுகளை ஈ) வினைகளை

79. எதிர்மறைப் பொருளில் வருவது __________ ஆகும்.

அ) தொழிற்பெயர் ஆ) எதிர்மறைத் தொழிற்பெயர்

இ) வினையாலணையும் பெயர் ஈ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

80. விகுதி பெறாமல் வினைப்பகுதியே தொழிற்பெயராதல் __________ ஆகும்.

அ) முதனிலைத் தொழிற்பெயர் ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

இ) வினையாலணையும் பெயர் ஈ) உருபுபெற்ற வினையாலணையும் பெயர்

81. தட்டு, உரை, அடி என்பன __________.

அ) முதனிலைத் தொழிற்பெயர் ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்கள்

இ) வினையாலணையும் பெயர்கள் ஈ) தொழிற்பெயர்கள்

82. கேடு, சூடு - என்பன __________.

அ) முதனிலைத் தொழிற்பெயர் ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

இ) வினையாலணையும் பெயர் ஈ) தொழிற்பெயர்

83. விகுதிபெறாமல் முதனிலைத் திரிந்து வருவது __________.

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்

இ) வினையடி ஈ) விகுதி

84. ஒரு வினைமுற்று பெயரின் தன்மையை அடைந்து வேற்றுமை உருபு ஏற்றும் ஏற்காமலும் வருவது __________.

அ) தொழிற்பெயர் ஆ) முதனிலைத் தொழிற்பெயர்

இ) வினையாலணையும் பெயர் ஈ) முதனிலைத் திரிந்த தொழிற்பெயர்